# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மேட்டூர் நகராட்சி

நிகழும் குரோதி வருடம் தை மாதம் 18ம் தேதி ஆங்கில ஆண்டு **31.01.2025ம்** தேதி **வெள்ளிகிழமை** காலை **11.30 மணிக்கு** மேட்டூர் நகர்மன்றத்தில் அவசர கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள் :30.01.2025 நகர்மன்ற தலைவர்
இடம் :மேட்டூர் அணை மேட்டூர் நகராட்சி

**மன்ற பொருள்**

1.அரசாணை (நிலை) எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAWS) துறை ,நாள் 23.11.2016 ன்படிஅரசு நகராட்சி தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி , உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, ஆகிய பள்ளிகளில் உள்ள கழிவறை சுத்தம் செய்யும் பணி , பள்ளி வளாகம் முழுவதும் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் , அதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர் அவர்களால் வருடந்தோறும் நிர்ணயிக்கும் மாவட்ட சந்தை விகித வாரப்படி , தனியார்துறை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியில் அமர்த்தி கொள்ளவும் , அதற்கான செலவு தொகை மற்றும் மேற்கண்ட அனைத்து தூய்மை பணிகள் மேற்கொள்ள தேவையான தளவாட சாமானங்கள் , கிருமிநாசினி மருந்துகள் மற்றும் பவுடர்கள் வாங்கி வழங்கவும் அதற்காக ஆகும் செலவின தொகையினை அந்தந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் வசூலிக்கும் கல்விவரியின் (EDUCATION CESS) மூலம் மேற்கொள்ளவும் , அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேற்காணும் அறிவுரைகளின்படி , மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட 7 எண்ணிக்கை அரசு / நகராட்சிபள்ளிகளில், பள்ளியின் அனைத்து அறைகளும், கழிப்பறைகள் , சிறுநீர் கழிப்பறைகள் மற்றும் பள்ளியின் சுற்றுப்புற வளாக பகுதிகள் முழுவதும் (HOUSE KEEPING ACTIVITIES OF THE SCHOOL) சுத்தம்செய்ய 12 பணியாளர்களை ஈடுபடுத்தி கொள்ளவும் , அதற்காக நபர் 1 க்குநாள் 1 க்குரூ.457/-வீதம் ,திரு.கே.கோவிந்தன் ஒப்பந்த்தாரர் ஓமலூர் என்பவர்க்கு 1.7.2024 முதல் 31.12.2024 முடிய ஆறு மாதங்களுக்கு பணிகள் மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு, மேற்காணும் ஒப்பந்த்தாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பந்தகாலம் 31.12.2024ந் தேதியுடன் முடிவடைகிறது. தற்பொழுது பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்த்தாரரான திரு.கே.கோவிந்தன் என்பவர் 6.11.2024 ந்தேதிய கடிதத்தில் பணி நீட்டிப்பு செய்து தருமாறும் கேட்டுள்ளார். எனவே 2019-2020,2020-2021,மற்றும் 2021-2022 ம் ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி தொகைக்கும் மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி, ஓமலூர் அவர்களுக்கு 1.1.2025 முதல் 30.6.2025 முடிய ஆறு நகராட்சி பள்ளிகளில் மட்டும் தூய்மைபணி மேற்கொள்ள தெரிவித்து ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து

உத்திரவு வழங்கவும் அதற்காகும் தோராய செலவினம்ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1.மன்றம் அனுமதி வழங்கலாம்

2.இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.2248/2019/எச்1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.20 நாள்.31.01.2025**

**2.** மேட்டூர் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024 ஆம் ஆண்டு நிதியின் கீழ் அறிவுசார் மையம் கட்டிடம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நூலகம் மற்றும் அறிவுசார் மையம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ள புதிய Interactive Smart Board மற்றும் கணினி மென்பொருள்கள் இயக்குவதற்கான 50Mbps (1:1) Internet Leased Line (ILL Over GPON) Circuit ஆண்டு கட்டணம் ரூ.2,06,500/-ஐ செலுத்த கோரி BSNL சேலம் என்ற நிறுவனத்திடமிருந்து கேட்பு அறிவிப்பு வரப்பெற்றுள்ளது.

மேற்படி அறிவுசார் மையம் கணினி மற்றும் Interactive Smart Board பயன்பாட்டிற்கான 50Mbps (1:1) Internet Leased Line (ILL Over GPON) Circuit இணைப்பு ஆண்டு வாடகை கட்டண தொகை ரூ.2,06,500/-ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து BSNL சேலம் என்ற நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1666/2022/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 21 நாள்.31.01.2025**

3. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்க காவேரி பாலம் புதிய நிரேற்று நிலையம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி 01.07.2023 முதல் 31.12.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் தனியார் பணியாட்கள் கொண்டு திரு.K.கோவிந்தன் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான குடிநீர் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்க ஏற்படும் காலங்களுக்கு ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மூலம் பழைய விலை மதிப்பீட்டில் ஜனவரி 2024 ஒரு மாதம் மட்டும் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யப்பட்டது.

மேலும் குடிநீர் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி ஒப்பந்த முறையில் தனியார் பணியாட்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 15.02.2024-ல் நடைபெற்று அதற்கான பணி உத்தரவு 24.02.2024-ல் வழங்கப்பட்டது. அதன்படி பிப்ரவரி-2024ஆம் மாதம் காவேரி பாலம் புதிய நிரேற்று நிலையம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் திரு.K.கோவிந்தன் என்ற ஒப்பந்ததாரர் தனியார் பணியாட்கள் மூலமாக மேற்கொண்ட பணிக்கு பிப்ரவரி 2024 மாதம் பட்டியல் தொகை

ரூ.2.33/– இலட்சம் குடிநீர் நிதியில் வழங்க அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் விநியோக அத்தியாவசிய பணிகள் கருத்தில் கொண்டு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பழைய விலைவிகிதத்தில் பணிமேற்கொண்டு வரும் திரு.K.கோவிந்தன் ஒப்பந்ததாரர் மூலம் பிப்ரவரி –2024 மாதம் பணி நீட்டிப்பு செய்யப்பட்டது மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 22 நாள்.31.01.2025**

4. மேட்டூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 30 வரையிலான பகுதிகளில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகிக்க சீத்தாமலை பழைய நிரேற்று நிலையம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி 01.07.2023 முதல் 31.12.2023 வரை ஒப்பந்த அடிப்படையில் தனியார் பணியாட்கள் கொண்டு திரு.K.கோவிந்தன் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறான குடிநீர் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்க ஏற்படும் காலங்களுக்கு ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மூலம் பழைய விலை மதிப்பீட்டில் ஜனவரி 2024 ஒரு மாதம் மட்டும் பணி மேற்கொள்ள கால நீட்டிப்பு செய்யப்பட்டது.

மேலும் குடிநீர் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி ஒப்பந்த முறையில் தனியார் பணியாட்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி 15.02.2024–ல் நடைப்பெற்று அதற்கான பணி உத்தரவு 24.02.2024–ல் வழங்கப்பட்டது. அதன்படி பிப்ரவரி–2024ஆம் மாதம் காவேரி பாலம் புதிய நிரேற்று நிலையம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை ஏற்கனவே பணி மேற்கொண்டு வரும் திரு.K.கோவிந்தன் என்ற ஒப்பந்ததாரர் தனியார் பணியாட்கள் மூலமாக மேற்கொண்ட பணிக்கு பிப்ரவரி 2024 மாதம் பட்டியல் தொகை ரூ.2.38/– இலட்சம் குடிநீர் நிதியில் வழங்க அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி குடிநீர் விநியோக அத்தியாவசிய பணிகள் கருத்தில் கொண்டு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பழைய விலைவிகிதத்தில் பணிமேற்கொண்டு வரும் திரு.K.கோவிந்தன் ஒப்பந்ததாரர் மூலம் பிப்ரவரி –2024 மாதம் பணி நீட்டிப்பு செய்யப்பட்டது ஏற்க்கலாம்.

**(ந.க.எண்.914/2019/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண். 23 நாள்.31.01.2025**

**5.** மேட்டூர் நகராட்சி சொந்தமான உயர் எரிவாயு கலன் (Bio Methnation Gas Power Plant) பழுது மற்றும் மறுபுனரமைக்கும் பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.20.90/– இலட்சத்தில் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு 28.01.2025–ல்

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.Govindan & Co poosaripatty (P.o) Omular. | (−) 0.45% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. | Thiru.M.Vijayakumar, Omular | (+)0.61% மதிப்பீட்டை விட அதிகம். |

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3520/2024/இ1)**

**அனுமதிக்கப்பட்டது.**

**தீர்மான எண்.24 நாள்.31.01.2025**